**MCOP. 19 / 2023- PW1 .**

**திரு. மஞ்சுநாத் த/பெ.**

**நாள்:27.03.2024**

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். கேஏ **459986** என்ற லைலான் தோஸ்து வண்டியை நான் தான் ஓட்டி சென்றேன். நான் ஓட்டி சென்ற வாகனம் **3** ம் எதிர்மனுதாரர் வெங்கடேசுக்கு சொந்தமானது. விபத்து ராய்கோகட்டை - ஒசூர் சாலையில் ஏற்பட்டது. புகார் என் மீது தான் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மனுவிற்கு **1,2** எதிர்மனுதாரர்கள் தேவையில்லாத தரப்பினர்கள் என்றால் சரியல்ல. **1** ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது எந்த கவனகுறையும் இல்லை என்றால் எனது வண்டி டயர் வெடித்து விட்டது. எதிர்புறமாக வந்த வாகனத்தை பார்த்து நான் வண்டியை நிறுத்தி விட்டேன். விபத்து எனது அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யும் படி உயர் நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்யவில்லை. எனக்கு இழப்பீடு எதுவும் வரவேண்டும் என்றால் நான் **3, 4** எதிர்மனுதாரர்களிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் வலது காலில் காயம் ஏற்பட்டு கால் அகற்றப்பட்டுள்ளது. இடது கை துண்டாகி விட்டது. ராடு வைத்துள்ளார்கள். காலர் எழும்பு முறிந்துவிட்டது அதற்கு சிகிச்சை அளித்துள்ளார்கள். நான் ஓட்டுநர் என்று மனுவில் சொல்லி உள்ளேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் இருந்தது ஆனால் அது தொலைந்துவிட்டது. நான் பெங்களுரில் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். மடிவாளா ஆடிஓ அலுவலகத்தில் தான் உரிமம் பெற்றேன். நான் எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் எனக்கு உரிமம் இருந்து இருந்தால் அதை தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அதை வழங்கிய மருத்துவரை விசாரணை செய்யாததல் ஏற்று கொள்ள கூடாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.**16** மருத்துவ பில்களில் ரூ.**340404/-** என்று குறப்படப்பட்டுள்ளது என்றும் இறுதி பில் ரூ.**264000/-** மட்டும் நான் மருத்துவமனைக்கு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பார்மசி பில் தனியாக ரூ.76404/- என்று மருத்துவ பில்லில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பைனல் பில்லில் பார்மசி பில் ரூ.25889/- என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் அந்த ரூ.25889 ஐ மேற்படி பார்மசி பில் ரூ.76404/- ல் கழித்து இருப்பார்கள் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ செயல்திறன் பாத்திப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. 1, 2, எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் பொய்யான தகவல் சொல்லி புகார் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். டயர் தான் வெடித்து விட்டது. குற்ற வழக்கு இந்த தீர்பாயத்தை கட்டுப்படுத்தாது என்றால் அது எனக்கு தெரியாது. நான் எனது காப்பீட்டு நிறுவனத்திடம் இழப்பீடு கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது கவனகுறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் இழப்பீடு கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்த மட்டில் நான் 3ம் நபர் இல்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்களை பொறுத்து தான் நான் 3ம் நபர் என்றும் நான் அவர்களிடம் தான் இழப்பீடு கேட்கமுடியும் என்றால் சரியல்ல. எனக்கு விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் தான் அநத் ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல உரிமம் தொலைந்து விட்டது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை நான் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இருந்ததாக சொன்னால் தான் இழப்பீடு பெற முடியும் என்பதால் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்று மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் 3ம் நபர் இல்லை என்பதாலும் எனது பெயரில் ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் நான் பாலிசி விதிமீறல் செய்துள்ளதாலும் மனு 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செயப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./–எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**